சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி. 244/2023

**PW1 வினோத்ராஜ்** **01.08.2025**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 1 எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் இந்த மனுவை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என கேட்டால் எனது தகப்பனார் விபத்தில் இறந்துவிட்டார் அதனால் இழப்பீடு கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது தந்தைக்கு விபத்து சமயத்தில் 60 வயதிருக்கும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கையில் அரசு விரைவு பேருந்தில் புகார் கொடுத்த நபர் உறங்கி சென்று கொண்டிருந்த போது விபத்து நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு புகார் கொடுத்த நபர் உறங்கி சென்று இருக்கும் போது விபத்தை பொருத்து அவருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் வாய்ப்பில்லை. 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கரைதயாகவும் இயக்கவில்லை என்றும், அவர் மோட்டார் வாகன விதிகளின் படி சரியாக இயக்கினார் என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவு காரணமில்லை என்பதால் இந்த வழக்கு 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி